**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**CRLMP.NO. 216 /2025 PW- 1**

| | |
|---|---|
| Name | செங்கொடி |
| Husband/Father Name | லட்சுமிநாராயணன் |
| Village /Area | முத்துக்கடை |
| Taluk | |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 43 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 19.06.2025 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் முத்துக்கடையில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனது உறவினர் மாலதி என்பவர் எனக்கு பொதுப்பணித்துறையில் வேலை வாங்கி கொடுப்பதாக கூறி ரூ.3,45,000/- பணம் பெற்றுக்கொண்டார். 13.08.2022 அன்று ரூ.45,000/- பணத்தை நான் ஆன்லைன் பரிவர்தனை மூலமாக அவரது வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். அதன் பிறகு சிறிது சிறிது தவணைகளாக மொத்தம் ரூ.3,45,000/- அவருக்கு ஆன்லைன் பரிவர்தனை மூலம் மாற்றம் செய்தேன். ஜனவரி 2023 ல் எனக்கு வாட்சப் மூலமாக வேலை உறுதி ஆகிவிட்டது என்று மாலதி மெசேஜ் அனுப்பினார் அவர் அனுப்பி மெசேஜ்ல் என்னுடன் இன்னும் 5-6 பேருக்கு வேலை உறுதி செய்து பதிவெண் போல் ஒரு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை பற்றி பின்பு விசாரிக்கும் போது அது பொய்யான தகவல் என்று தெரிந்து கொண்டேன். அதன் பிறகு மாலதியிடம் பணம் திருப்பி கேட்டேன் திருப்பி தருகிறேன் என்று சொல்லி தாமதம் செய்து வந்தார். மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்தேன். போலீசார் மூலம் விசாரணை

செய்யப்பட்டது. போலீசார் விசாரணையில் வழக்கு பதிவு செய்ய வேண்டுமா என்று கேட்டார்கள் எனக்கு பணம் கிடைத்தால் போதும் என்று சொன்னேன். அந்த விசாரணையில் மாலதி மூன்று தவணைகளாக எனது பணத்தை திருப்பி தருவதாக கூறினார். ஆனால் அவர் சொன்ன தேதியில் பணம் தரவில்லை. நான் மட்டும் தான் காவல் நிலையம் சென்று அவருக்காக மாலை வரை காத்திருந்தேன். அவர் வரவே இல்லை. மீண்டும் இராணிப்பேட்டை மாவட்ட கண்காணிப்பாளருக்கு பதிவு தபால் மூலும் ஒரு தபால் அனுப்பினேன் ஆனால் இந்நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் தான் நீதிமன்றத்தை நாடியுள்ளேன்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.06.20 10:39:33 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.